

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2018 – 2020)

(பதினைந்தாவது பேரவை)

பதினொன்றாவது அறிக்கை

"கிராமச் சாலைகள்" (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை) குறித்து 2011–2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (பதினான்காவது பேரவை) பேரவைக்கு அளித்த நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 20 FEB 2020)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2018 – 2020)

(பதினைந்தாவது பேரவை)

பதினொன்றாவது அறிக்கை

"கிராமச் சாலைகள்" (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை) குறித்து 2011–2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (பதினான்காவது பேரவை) பேரவைக்கு அளித்த நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.

பொருளடக்கம்

		பக்கங்கள்
மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு (2018–2020)	...	iii
முன்னுரை	...	v
"கிராமச் சாலைகள்" (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை) குறித்து 2011–2012–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (பதினான்காவது பேரவை) பேரவைக்கு அளித்த நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.		1

இணைப்புகள்

இணைப்பு – 1	துறையால் நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்பெற்ற பரிந்துரைகள்	3–8
இணைப்பு – 2	பரிந்துரைகளுக்கான துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப் பெற்றவை	9–14
இணைப்பு – 3	துறையிடமிருந்து பதில் வரப்பெற்று நடவடிக்கைகள் மேலும் தொடரப் பெற வேண்டிய பரிந்துரைகள்	15–20

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு (2018–2020)
(பதினைந்தாவது பேரவை)

(5.7.2018–ஆம் நாள் அமைக்கப்பெற்று 31.03.2020 வரை நீட்டிக்கப்பட்டது)

தலைவர்

1. திரு. தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்,
துணை முதலமைச்சர் (அலுவல் காரணமாக)
3. திரு. துரைமுருகன்,
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)
4. திரு. S. செம்மலை,
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)
5. திரு. C.V. இராஜேந்திரன்
6. திரு. இ. கருணாநிதி
7. திரு. ஆர். காந்தி
8. திரு. V.S. காளிமுத்து
9. திருமதி ப. சத்யா
10. திரு. சி. சந்திரசேகரன்
11. திரு. எஸ்.எஸ். சரவணன்
12. திரு. M. செல்வராசு
13. திரு. அ. நடராஜன்
14. திரு. பெ. பெரியபுள்ளான் (எ) செல்வம்
15. முனைவர் க. பொன்முடி
16. திரு. கி. மாணிக்கம்
17. திரு. M.K. மோகன்
18. திரு. வி.ஜி. ராஜேந்திரன்
19. திரு. வாகை சந்திரசேகர்

செயலகம்

திரு. கி. சீனிவாசன் . . செயலாளர்
திரு. அ. அய்யன்பெருமாள் . . இணைச் செயலாளர்
திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு (2018–2020)

முன்னுரை

1. "கிராமச் சாலைகள்" (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை) குறித்து 2011–2012–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (14–வது பேரவை) 8.5.2012–ஆம் நாளன்று பேரவைக்கு அளித்த நான்காவது அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான பதினொன்றாவது அறிக்கையை குழு 2018–2020 (பதினைந்தாவது பேரவை) அதிகாரம் அளித்தவாறு மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

2. 2018–2020–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு 5.7.2018–ஆம் நாளன்று அமைக்கப்பெற்று 2020 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாள் வரை நீட்டிக்கப்பட்டது.

3. குழு 31.10.2019–ஆம் நாளன்று சென்னையில் கூடி மேலே பத்தி 1–இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகள் மீது துறை எடுத்த நடவடிக்கைப் பட்டியலை ஆய்வு செய்தது.

4. 31.10.2019–ஆம் நாளன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இவ்வறிக்கைக்கு குழு ஒப்புதல் அளித்தது.

5. குழுவின் பணிகளுக்கு உதவிய சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களுக்கு குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

சென்னை – 600 009,
நாள்: 31.10.2019
விகாரி, ஐப்பசி 14,
திருவள்ளுவர் ஆண்டு–2050.

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை

"கிராமச் சாலைகள்" (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை) குறித்து 2011–2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (பதினான்காவது பேரவை) பேரவைக்கு அளித்த நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை.

******

1. 2011–2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (பதினான்காவது பேரவை) பேரவைக்கு அளித்த நான்காவது அறிக்கையில் கண்டுள்ள 31 பரிந்துரைகளில் 12 பரிந்துரைகள் துறையால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவை இணைப்பு 1–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

12 பரிந்துரைகள் மீது துறை எடுத்த நடவடிக்கைகளை குழு ஏற்றுக்கொண்டுள்ளது. குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பெற்ற பரிந்துரைகள் பற்றிய விவரங்கள் இணைப்பு 2–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

7 பரிந்துரைகள் மீது துறை மேலும் நடவடிக்கை தொடர வேண்டுமென குழு முடிவு செய்துள்ளது. துறையால் மேலும் நடவடிக்கை தொடரப்பட வேண்டிய இனங்கள் இணைப்பு 3–இல் பட்டியலிடப்பெற்றுள்ளன.

2. இணைப்பு 3–இல் கண்டுள்ள குழு தொடர விரும்பும் பரிந்துரைகள் மீது துறை உரிய நடவடிக்கை எடுத்து 2 மாத காலத்திற்குள் விவர அறிக்கை அனுப்பப்படவேண்டுமென்று குழு விரும்புகிறது.

சென்னை – 600 009,
நாள்: 31.10.2019
விகாரி, ஐப்பசி 14,
திருவள்ளுவர் ஆண்டு–2050.

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்புகள்

இணைப்பு – 1

துறையால் நிறைவேற்றப் பெற்றதாக கருதப்பெற்ற பரிந்துரைகள்

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
1	5	33	நெடுஞ்சாலைத் துறைக்கு 'பராமரிப்பு நிதி' என்று ஒதுக்கீடு செய்வது போல், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கும் 'கிராமச் சாலைகள் பராமரிப்பு நிதி' என்று ஒதுக்கீடு செய்யவும், சில நேர்வுகளில் ஊராட்சிக்குச் சொந்தமான பாலங்கள், சாலைகளை பராமரிக்கும் பணி நெடுஞ்சாலை வசம் கொடுத்தாலும், உரிமையைப் (ownership) பொறுத்தவரை ஊரக வளர்ச்சித் துறை வசமே இருக்க வேண்டுமெனவும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் முதன் முதலாக, நெடுஞ்சாலைத் துறையைப் போலவே ஊரக வளர்ச்சி துறையின் மூலமும் ஊரகச் சாலைகள் பராமரிப்பு செய்வதற்காக ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம் என்ற திட்டம் 2013–2014 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 2013–2014 ஆம் ஆண்டில் ரூ.400 கோடி மதிப்பீட்டில் 3977.28 கி.மீ. நீளமுள்ள சாலைகளும் மற்றும் 2014–2015 ஆம் ஆண்டில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் 2805.41 கி.மீ. நீளமுள்ள சாலைகளும் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. 2015–2016 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.133.56 கோடி மதிப்பீட்டில் 1303 கி.மீ நீளமுள்ள சாலைகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. 2016–2017ம் ஆண்டில் தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.142.62 கோடி மதிப்பீட்டில் 1579.57 கி.மீ. நீளமுள்ள சாலைகள் எடுக்கப்பட்டுள்ளன. தற்பொழுது ஊராட்சிக்குச் சொந்தமான பாலங்கள் மற்றும் சாலைகள் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாகவே பராமரிப்பு செய்யப்பட்டு வருகின்றன. மேலும், அவற்றின் உரிமையும் (ownership) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வசமே உள்ளது. (அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
2	13	65	நபார்டு ஊரக உட்கட்டமைப்பு சாலைப் பணிகள் தொடர்பாக, ஊரக உள்கட்டமைப்பு நிதி XVII–ன் கீழ் 2011–2012 ஆம் ஆண்டு பணிகளுக்கு நபார்டு வங்கியிலிருந்து கூடுதல் தொகை பெற்று பணிகளை விரைந்து முடிக்க குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
ஊரக உட்கட்டமைப்பு நிதி XVII–ன் கீழ் 2011–2012 ஆம் ஆண்டில் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்திட முதல் கட்டமாக நபார்டு வங்கி 326 சாலைப்பணிகள் 3 பாலங்களுக்கு ரூ.142.27 கோடி மதிப்பீட்டில் எடுத்துச் செய்ய அனுமதி வழங்கப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் குழு பரிந்துரைத்தது போல நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு நிதி XVII–ன் கீழ் 2011–2012 ஆம் ஆண்டில் கூடுதலாக 1705.5 கி.மீ நீளமுள்ள 629 சாலைப் பணிகள் ரூ.309.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அனுமதி பெறப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. (அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
3	15	74	மதுரை மாவட்டத்தில், நபார்டு திட்டத்தின் கீழ், நபார்டு திட்டம் 16–ல் 7 சாலைப் பணிகளில் நிலுவையாகவுள்ள ஜம்பலாபுரம்–அத்திப்பட்டி சாலைப் பணிகளை விரைந்து முடிக்க குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. (அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
4	17	84	ஜம்பலாபுரம்–அத்திப்பட்டி சாலைப் பணிகளை விரைந்து முடிக்க குழு பரிந்துரை செய்கிறது.	இப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. (அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
5	18	89	மேற்படி பணி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் மேற்கொள்ள வேண்டியது என்பதால் அதற்கு வனத்துறையின் அனுமதி பெற்று அச்சாலைப் பணியினை விரைவில் முடிக்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.	சிறமலைப் புதூர்–தென்மலை வரை 6.3 கி.மீ. நீளமுள்ள சாலை ரூ.145.50 இலட்சம் மதிப்பீட்டில் வனத்துறையினரால் எடுத்துக் கொள்ளப்பட்டு 2010–ஆம் ஆண்டு ஆரம்பித்து 2013– ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தென்மலை குக்கிராமத்திற்கு சாலை இணைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. (அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
6	19	92	திண்டுக்கல் மாவட்டத்தில், சிறப்புச் சாலைகள் திட்டத்தின் கீழ் நிலுவையாக உள்ள சாலைப் பணிகளை விரைந்து முடிக்க குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
இப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. (அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
7	20	99	நபார்டு திட்டத்தின்கீழ் சுந்தலிங்கநகர்–பேட்மா நகரம்–சிவகளை சாலையில் விரிவாக்கம் செய்வதில் நிலுவைப் பணிகளை விரைந்து முடிக்க குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
இப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. (அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
8	21	102	தூத்துக்குடி மாவட்டத்தில் நிலுவையில் உள்ள பணிகளை விரைந்து முடிக்க குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
நிலுவையில் உள்ள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. (அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
9	22	105	13–வது நிதி குழுவின் மானிய நிதியிலிருந்து பேருந்து செல்லும் சாலைகளை ஐந்தாண்டுக்கு ஒரு முறை அமைக்கப்பட வேண்டும் என விதி உள்ளது. இயற்கை சீற்றத்தினால் அச்சாலைகள் பாதிக்கும்போது அவற்றை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அமைப்பதற்கு விதிவிலக்கு அளிக்க துறை தேவையான நடவடிக்கையை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
13–வது நிதிக்குழு மானிய நிதியிலிருந்து 2011–2012 ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டத்திலும் பேருந்து செல்லும் சாலைகளை அமைப்பதற்காக 1765.06 கி.மீ நீளத்திற்கு ரூ.143.00 கோடி மதிப்பீட்டில் 923 சாலைப்பணிகள் எடுக்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. (அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	24	113	திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி–செண்பகராமன் சாலைக்கு நபார்டு XVII திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட உள்ள பணிகளுக்கு டெண்டர் கோரும் பணிகளை விரைந்து முடித்திட குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
PMGSY VIII–திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி செண்பகராமநல்லூர் சாலை 2.7 கி.மீ. நீளத்தில் ரூ.100.28 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. (அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
11	27	128	ஈரோடு, காப்புக் காடு பகுதியில் சாலை அமைக்கும் பணிகளுக்கு துறை வனத் துறையின் அனுமதியினை பெற்று பணிகளை விரைவில் துவங்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			காப்புக் காடு வழியாக செல்லும் சாலையானது அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள மலைப் பகுதியான தாமரைக் கரை முதல் கொங்காடை வரையிலான சாலையாகும். இச்சாலைப் பணியானது PMGSY Phase IX 2014–2015 திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இச்சாலையில் உயர்மட்டப் பாலம் அமைத்திட வனத்துறையின் அனுமதி பெற்று SCPAR 2012–2013 திட்டத்தின் கீழ் மணியாச்சி பள்ளத்தின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.
			(அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	
வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	
12	30	139	நாகர்கோவில் வடசேரியில் அனைத்து வசதிகளுடன் கூடிய மீன் அங்காடி அமைக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்தது.	
			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			நாகர்கோவில் வடசேரியில் அனைத்து வசதிகளுடன் கூடிய மீன் அங்காடி தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய (NFDB)த்தின் நிதியுதவியுடன் ரூ.94.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, 27.02.2016 முதல் மக்கள் பயன்பாட்டில் உள்ளது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது.
			(அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	

இணைப்பு – 2

பரிந்துரைகளுக்கான துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பெற்றதாக கருதப்பெற்றவை

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	1	15	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பல்வேறு நிலைகளிலுள்ள காலிப் பணியிடங்களையும் விரைவில் நிரப்பப்படவேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.	மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள ஒட்டுநர்/அலுவலக உதவியாளர் (மு) இரவுக் காவலர் பணியிடங்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே நியமன அலுவலர் என்பதால் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களே பணியிடங்களை நிரப்பி வருகின்றனர். மேலும் வட்டார வளர்ச்சி அலுவலர்/துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையிலுள்ள காலிப் பணியிடங்களை பதவி உயர்வு மூலம் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே நியமன அலுவலர் என்பதால் நிரப்பி வருகின்றனர். இளநிலை உதவியாளர்/சுருக்கெழுத்து தட்டச்சர்/தட்டச்சர் பணியிடங்கள் தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் நிரப்பப்பட்டு வருகிறது. (அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.
2	2	23	தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் குறித்த கணக்கெடுப்புப் பணிகளை மாநிலத்தில் உள்ள அனைத்து குக்கிராமங்களிலும் விரைவாக முடித்து அதன் முழுமையான விவரங்களை அனைத்து உறுப்பினர்களுக்கும் மென் நகல், வன் நகல் இரண்டையும் அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.	தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் குறித்தான கணக்கெடுப்பு மற்றும் பணிகள் விவரங்களை 2011–2012 முதல் 2015–2016 ஆண்டு வரையிலான ஐந்தாண்டுகளுக்கும் முழுமையான வடிவில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மென் நகல், வன் நகல் ஆகிய இரண்டினையும் சட்டமன்றத்தில் அளிக்கப்பட்டு உள்ளது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

குழுவின் பரிந்துரையின்படி சட்டமன்றத்தில் அளிக்கப்பட்ட புத்தக வடிவில் (Booklet) மற்றும் மென் நகலில் தாய் திட்டத்தில் மாவட்ட வாரியான 2015–2016 ஆண்டு பணிகள் விவரம் மற்றும் சட்டமன்ற தொகுதிவாரியான பணிகள் விவரங்கள் ஆகியவற்றை அடங்கிய 2 மாதிரி மென் நகல் (CDs) தகவலுக்காக அனுப்பப்படுகிறது. இதுபோன்று 2011–2012 முதல் 2015–2016 வரை ஆண்டுதோறும் உள்ள பணிகள் தொகுதிவாரியாக அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

(அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
3	7	39	நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் செயல்படுத்துவது போல் மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை தனியே சேகரிக்கவும், இதற்கான விழிப்புணர்வை கிராமப் புறங்களில் ஏற்படுத்தவும் குழு பரிந்துரை செய்கிறது.	கிராம புறங்களில் தூய்மை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தவும் குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பைகளை மண் புழு உரம் தயாரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளவும், மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை முறையாக அப்புறப்படுத்தவும், தூய்மையான ஊராட்சி என விளங்கும் வகையில் முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இது குறித்து அனைத்து ஊராட்சித் தலைவர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	8	44	ஒப்பந்தப்புள்ளி கோரும் முன் ஆராய்ந்து விலை நிர்ணயம் செய்யவும், நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித் துறை மூலம் சாலைகள் அமைக்கப்படுவதால், இந்த இரண்டு துறைகளிலும் நிர்ணயிக்கிற விலையை அடிப்படையாக வைத்துக்கொண்டு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் மேற்கொள்ளப்படுகிற பணிகளுக்கான விலையில் மாற்றம் இல்லாமல் மேற்கொள்ள வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			2012–2013 ஆம் ஆண்டு தர விலைப்பட்டியல் நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறையின் மூலம் வெளியிடப்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் அனைத்து மாவட்டங்களிலும் பின்பற்றி தடையின்றி பணிகள் நடைபெற்று வருகின்றது. (அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.
வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	
5	9	47	குவாரிகளிலிருந்து கல் எடுக்கும்போது ஒப்பந்ததாரர்கள் தவறான வழிமுறைகளைக் கையாளக்கூடாது என்றும், மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியோடு கட்டுமானப் பொருட்களுக்கான விலையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.	
			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			கட்டுமானப் பொருட்களுக்கு விலை விவரப் பட்டியலின்படி (Schedule of Rates) விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. (அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.
வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)	
6	10	50	சாலை பராமரிப்புப் பணிகளுக்கென்று வழங்கப்பட்ட பணம் வேறு பணிகளுக்குச் செலவிடப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கவும், சாலைப் பராமரிப்புப் பணிகளுக்கென்று ஒதுக்கப்பட்ட பணத்தை வேறு பணிகளுக்காக பயன்படுத்தக்கூடாது என்றும், தூத்துக்குடி மாவட்டம், PMGSY-Phase-VIII திட்டத்தின் கீழ் ரூ.538 இலட்சம் செலவில் 18 சாலைகள் அமைக்கும் பணிக்கு மத்திய அரசின் அனுமதியைப் பெறவும் குழு பரிந்துரை செய்கிறது.	
			துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
			➢ சாலை பராமரிப்பு பணிகளுக்கென்று ஒதுக்கப்பட்ட பணம் சாலை பராமரிப்புப் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. ➢ PMGSY-Phase-VIII திட்டத்தின்கீழ், 83.03 கி.மீ. நீளமுள்ள 38 சாலைகள் ரூ.28 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் எடுக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. (அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
7	11	53	இந்த நிதியாண்டில் மேற்கொள்ளப்படும் சிமெண்ட் கான்கிரீட் பணிகளின் விவரங்களை திட்ட இயக்குநர்களிடம் துறை பெற்று அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

2012–13 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் பணிகள் வருமாறு:

குழுவின் குறிப்புரை
(6)
துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வ. எண்	பணிகள்	மொத்த எண்ணிக்கை	மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)
1.	தார் சாலைகள்	3045	101848.00
2.	சிமெண்ட் கான்கிரீட்	4528	11108.23
3.	பாலங்கள்	9	1150.70

(அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
8	12	62	500 பேருக்குமேல் மக்கள் தொகை கொண்ட குடியிருப்புப் பகுதிகளில் சாலை அமைக்கும் பணி முடிவடைந்துள்ள இடங்களில், 250 முதல் 500 பேர் வரை மக்கள் தொகையுள்ள இடங்களுக்கும் சாலை வசதி செய்து கொடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின்கீழ், 500–க்கு மேல் மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்களுக்கு மட்டுமே சாலை இணைப்பு வசதி ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்படும். எனவே, 500–க்கு மேல் மக்கள் தொகை கொண்ட குடியிருப்புப் பகுதிகளில் சாலை அமைக்கும் பணி முடிவடைந்துள்ள இடங்களில் 250 முதல் 500 பேர் வரை மக்கள் தொகை கொண்ட இடங்களுக்கு சாலை வசதி செய்து கொடுப்பது, மாநில அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் தமிழகத்தில் உள்ள 250 முதல் 500 பேர் வரை மக்கள் தொகை உள்ள 19,463 குக்கிராமங்களில், வனப்பகுதி மற்றும் சாலை அமைக்க போதிய வசதியில்லாத 67 குக்கிராமங்கள் தவிர ஏனைய அனைத்து குக்கிராமங்களுக்கும் சாலை இணைப்பு வசதி தரப்பட்டுள்ளது.

(அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)

குழுவின் குறிப்புரை
(6)
துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
9	14	69	சாலைகள் போடும்போது, அந்தப் பணிகளின் தரம் குறித்து ஆய்ந்திட, திடீர் ஆய்வு மேற்கொள்ள குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
சாலைகள் போடும்போது உதவி செயற்பொறியாளர், செயற்பொறியாளர், திட்ட இயக்குநர், மாவட்ட ஆட்சித்தலைவர், மண்டல அலுவலர்கள் மற்றும் மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் ஆய்வு செய்கிறார்கள். மேலும், கண்காணிப்புப் பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வளர்ச்சி), கூடுதல் இயக்குநர்கள் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வளர்ச்சி), ஆணையர் ஆகியோர் திடீர் ஆய்வு மேற்கொள்கின்றனர். இது தவிர பிளாஸ்டிக் கழிவு கொண்டும் போடப்படும் சாலைகள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்படுகிறது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(மு)ஒ/2012–31, நாள் 26.07.2019)

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
10	16	79	திண்டுக்கல் மாவட்டத்தில், ஆதிதிராவிடர் பகுதிகளில் சாலைப் பணிகளில் சில இடங்களில் விட்டு விட்டு பணி மேற்கொண்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் இப்பணிகளில் 20%–க்கு குறைவில்லாமல் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு சாலை வசதிகள் செய்து தரவேண்டும் என்றும், பாரபட்சம் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் 2011–2012–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டவாறு தற்போது திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர் பகுதிகளில் சில இடங்களில் விடுபட்டுள்ள கிராம சாலை மேம்பாட்டு பணிகள் அனைத்தும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு மாநில நிதிக்குழு மானிய ஒதுக்கீடு (SFC), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை உட்கட்டமைப்பு வசதி திட்டம் (RIS), தாய் திட்டம் (THAI), மற்றும் பிற்படுத்தப்பட்ட பகுதிகள் மானிய நிதி திட்டம் (BRGF) ஆகிய திட்டங்களில் முன்னுரிமை அளிக்கப்பட்டு மேற்படி தார்ச்சாலைப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

மேலும், ஒவ்வொரு நிதியாண்டிலும் திண்டுக்கல் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் கிராம சாலைகள் மேம்பாடு பணிகளில் அனைத்து திட்ட ஒதுக்கீட்டுத் தொகையில், அனைத்து ஆதிதிராவிடர் பகுதிகளிலும் 20%-க்கும் கூடுதலான அளவில் கிராம சாலைகள் பணிகள் தேர்வு செய்யப்பட்டு பாரபட்சமின்றி பணிகள் நடைபெற்று வருகிறது.

(அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012-31, நாள் 26.07.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
11	23	108	இதுகுறித்து கல்குவாரி முதலாளிகளிடத்திலும், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் நீங்களே துறை மூலம் பேச்சுவார்த்தை நடத்தி இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.	கல்குவாரியிலிருந்து வாகனங்கள் மூலம் கொண்டு வரப்படும் கற்கள் கிராமச்சாலைகள் வழியாக கொண்டு செல்லும் போது அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமான பாரங்கள் ஏற்றிச் செல்லாமல் இருப்பதை போக்குவரத்து துறை, வருவாய் துறை மற்றும் காவல்துறை ஆகியோர் மூலம் உறுதி செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012-31, நாள் 26.07.2019)

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
12	31	142	குக்கிராமங்களை மேம்படுத்தும் நடவடிக்கையில் தமிழக அரசினால் கொண்டு வரப்பட்ட 'தாய்' திட்டப் பணிகளை சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவர்களே செய்வது தொடர்பாக அரசு செயலாளர் மட்டத்தில் விவாதித்து விரைவில் முடிவெடுக்க குழு பரிந்துரை செய்கிறது.	அரசாணை எண்.203, ஊவ(ம)ஊ(பரா.1) துறை, நாள் 20.12.2007, அரசாணை (நிலை) எண்.100, ஊவ(ம)ஊ(மாஅதி.1) துறை, நாள் 02.12.2011, அரசாணை (நிலை) எண்.91, ஊவ(ம)ஊ(மாஅதி.1) துறை, நாள் 24.09.2012 ஆகிய அரசாணைகளின்படி தாய் திட்டப் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ)-க்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது	துறையின் பதில் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

(அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012-31, நாள் 26.07.2019)

இணைப்பு – 3

துறையிடமிருந்து பதில் வரப்பெற்று நடவடிக்கைகள் மேலும் தொடரப்பெற வேண்டிய பரிந்துரைகள்

வரிசை எண்	பரிந்துரை எண்	பத்தி எண்	பரிந்துரையின் சுருக்கம்	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	3	26	மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, எந்தெந்த பகுதிகளில் சாலைகள் மோசமான நிலையில் உள்ளதோ அவற்றைத் தேவைக்கேற்ப பழுது நீக்கம் செய்யவும், பணிகளை செய்யும்போதே ஆய்வு மேற்கொண்டு, புதிய கண்டுபிடிப்புகளே வளர்ச்சியின் ஆதாரம் என்பதால், பிளாஸ்டிக் கழிவுகளை சாலைப் பணிகளுக்கு பயன்படுத்துவதுபோல் வேறு புதிய உத்திகளை கையாண்டு, அவ்வப்போது குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.	பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி–VIII (2012–2013) முதல் பகுதி– X (2016–2017) வரை Coldmix technology, Coir Geo Textiles, Cement stabilization, Soil stabilization and Waste plastic போன்ற பல்வேறு தொழில்நுட்ப உத்திகளைக் கொண்டு 886 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 445.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 358 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 144 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. (அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	துறையால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 886 கி.மீ நீளமுள்ள சாலைகள் மற்றும் ரூ.445.75 கோடியில் அனைத்து பணிகளும் முடிக்கப்பெற்று அதன் விவரத்தினை குழுவிற்கு அறிக்கையாக அனுப்பிவைக்க குழு வலியுறுத்துகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
2	4	29	மாநில நிதிக் குழுவிடம் நிதி பெற்றும், Devolution Funds–ஐ பயன்படுத்தியும் 63,000 கிலோ மீட்டர் சாலைகளைப் பராமரிப்பதற்கு துறை தூரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்
(5)

ஊரகச் சாலைகள் காலமுறை பராமரிப்பு மற்றும் தொடர் பராமரிப்பு ஆகிய முறைகளில் பராமரிப்பு செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இந்த அரசால் ஊரகச் சாலைகளின் பராமரிப்பிற்காக பேணுகை "கொள்கை விளக்கக் குறிப்பு (Maintenance Policy)" முதன்முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், 63,000 கி.மீ நீளமுள்ள சாலைகளில், 5 வருடத்திற்கு மேலான சாலைகள் காலமுறை பராமரிப்பு முறையிலும், மீதமுள்ள சாலைகள் தொடர் பராமரிப்பு முறையிலும் பராமரிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம் என்ற புதிய திட்டம் 2013–2014 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 2013–2014 ஆம் ஆண்டில் ரூ.400 கோடி மதிப்பீட்டில் 3977.28 கி.மீ. நீளமுள்ள சாலைகளும், 2014–2015 ஆம் ஆண்டில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் 2805.41 கி.மீ. நீளமுள்ள சாலைகளும் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. 2015–2016 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.133.56 கோடி மதிப்பீட்டில் 1303 கி.மீ. நீளமுள்ள சாலைகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. 2016–2017 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.142.62 கோடி மதிப்பீட்டில் 1579.57 கி.மீ நீளமுள்ள சாலைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)

குழுவின் குறிப்புரை
(6)

Devolution Fund- ஐப் பயன்படுத்தி 63,000 கி.மீ. சாலைகளைப் பராமரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்த விவரத்தை குறிப்பாக குழுவிற்கு அளிக்க குழு மீண்டும் வலியுறுத்துகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
3	6	36	கிராமப்புற கட்டமைப்புப் பணிகளில் தொய்வு ஏற்படுவதை தடுக்க சாலைகள் மற்றும் பாலங்கள், குறிப்பாக கிராமப் பகுதிகளில் எந்தெந்தத் துறையின் கட்டுப்பாட்டில் வருகின்றன என்பதைப் பிரித்து பட்டியலிட வேண்டும். இது தொடர்பான பணிகளை விரைந்து முடிக்கவேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
கிராம பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் பாலங்கள் சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் பட்டியலிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பான அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. (அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	கிராமப் பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் பாலங்கள் எந்தத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றன என்பது குறித்த விவரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் பட்டியலிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனவா என்பதையும், அதற்கான ஏதேனும் இரண்டு ஒன்றியங்களில் பராமரிக்கப்படும் பட்டியலை குழுவின் பார்வைக்கு அனுப்ப துறை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
4 மற்றும் 5	25 மற்றும் 26	120 மற்றும் 123	கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் பகுதி VIII (பாரத் நிர்மான் பகுதி 3)–ன் கீழ் 5 சாலை பணிகள் மேற்கொள்ள கருத்துருவிற்கு அரசின் ஒப்புதலைப் பெற்று பணிகளை விரைந்து முடிக்க குழு பரிந்துரை செய்கிறது.

மேற்காணும் பணிகளுக்கான கருத்துருவிற்கு மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெற்று விரைந்து பணிகளை முடிக்க குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்

(5)

பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் பகுதி VIII –ன் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் 4 சாலைகள் 8.80 கி.மீ நீளத்தில் ரூ.235.30 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

(அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)

குழுவின் குறிப்புரை

(6)

கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் பகுதி VIII (பாரத் நிர்மான் பகுதி 3)–ன் கீழ் 5 சாலை பணிகளில் 4 சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளது என்ற பதிலை குழு ஏற்றுக் கொள்கிறது. மேலும், மீதமுள்ள ஒரு சாலையின் பணியின் விவரத்தினை குழுவிற்கு அனுப்பிவைக்கப்பெறவேண்டும் என்று குழு மீண்டும் பரிந்துரை செய்கிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
6	28	131	ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், பேருந்து செல்லும் வகையில் சாலை அமைக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக தூரித நடவடிக்கையினை மேற்கொண்டு, அச்சாலையினை நேர் சாலையாக அமைப்பதற்கான நடவடிக்கையினை துறை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 1.40 கி.மீ. நீளமுள்ள மாக்கஞ்ஞர் ஊராட்சி சாலையினை அகலப்படுத்த ஏதுவாக அருகில் தனியார் நிலத்தை சந்தை மதிப்பில் பெற்று ஊராட்சிக்கு வழங்குமாறு அந்தியூர் வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நிலம் ஒப்படைக்கப்பட்டவுடன் சாலை அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012–31, நாள் 26.07.2019)	குழு 2012–ஆம் ஆண்டு பரிந்துரை செய்துள்ளது. தனியார் நிலத்தை சந்தை மதிப்பில் பெற துறை எடுக்க வேண்டிய நடவடிக்கையில் கவனம் செலுத்தாதது வருந்தத்தக்கது. உடன் நிலத்தினைப் பெற்று, பேருந்து செல்லும் வகையில் நேர் சாலையாக அமைக்க குழு கேட்டுக்கொள்கிறது.

வரிசை எண் (1)	பரிந்துரை எண் (2)	பத்தி எண் (3)	பரிந்துரையின் சுருக்கம் (4)
7	29	136	ஈரோடு மாவட்டம், ஜல்லிபாளையம் முதல் குட்டையூர் செல்லும் சாலையில் காட்டாற்றில் குறுக்கே பாலம் முழுவதையும் தமிழக எல்லைக்குள் கட்ட வாய்ப்புள்ளதா என ஆராயும்படியும், வாய்ப்பிருப்பின் அதனை அமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் துறை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில் (5)	குழுவின் குறிப்புரை (6)
பாலம் கட்டப்பட வேண்டிய காட்டாற்றுப் பகுதி கர்நாடக மாநில எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது. இப்பாலத்தினை தமிழக எல்லைப் பகுதிக்குள் மாற்றியமைத்திட வாய்ப்பில்லை என்பது தெரிவிக்கப்படுகிறது.	குழுவின் பரிந்துரை ஆராயப்பட்டதற்கான விவரத்தை குழு அறிய விரும்புகிறது.

(அலுவல் சாரா குறிப்பு எண் 13188/வசெ(ம)ஒ/2012-31, நாள் 26.07.2019)

கி. சீனிவாசன்,
செயலாளர்.